செ.கு.எண்:.3 நாள்:.11.01.2010

**11.01.2010 அன்று போகி பண்டிகையின் போது ஏற்படும் காற்று மாசு குறித்த விழிப்புணர்வு பிரச்சார துவக்க விழாவில் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஆற்றிய உரை**

இன்றைய நாகரீக உலகில் சுற்றுச்சூழல் மாசு தொழிற்சாலைகளால் மட்டும் ஏற்படுவதில்லை. மக்கட்தொகை பெருக்கம், வாகனப்புகை, உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர் போன்றவற்றால் சுற்றுச்சூழல் மாசுபட்டு வருகின்றது. இவ்வகையான மாசு இயற்கையே சீர்செய்து கொள்ளும் அளவினை தாண்டி ஏற்படுவதால், பலவிதமான சுற்றுச்சூழல் பிரச்சனைகளை நாம் அனுபவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதில் மக்களின் பழக்கவழக்கத்தினால் ஏற்படும் காற்று மாசும் ஒன்றாகும். போகி மற்றும் தீபாவளி பண்டிகையால் ஏற்படும் காற்று மாசு மற்றும் ஒலி மாசு குறிப்பிடத்தக்கதாகும்.

நமது முன்னோர்கள் பொங்கல் திருநாளுக்கு முன் பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற அடிப்படையில் போகி பண்டிகையினை கொண்டாடி வந்துள்ளனர். சுமார் இருபது வருடம் வரை நமது வீடுகளில் சேகரம் ஆகும் இயற்கை பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட பழைய பொருட்களை தீயிட்டு கொளுத்தி வந்துள்ளனர். இச்செய்கையால் ஏற்பட்ட காற்று மாசுபாடு இயற்கையால் ஜீரணிக்கப்பட்டு சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாமல் இருந்து வந்துள்ளது.

ஆனால் இன்றைய சூழலை எடுத்துக்கொண்டால், தற்பொழுது போகி பண்டிகையின் பொழுது பழைய பொருட்களான பிளாஸ்டிக், செயற்கை இழைகளால் தயாரிக்கப்பட்ட துணிகள், ரப்பர் பொருட்கள், பழைய டயர் மற்றும் டியூப், காகிதம்,

இரசாயனம் கலந்த பொருட்கள் போன்றவற்றால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுவதோடு போகி அன்று விமானங்கள் வருகை மற்றும் புறப்பாடுகளில் தாமதம் ஏற்பட்டு வந்தது, சென்னை நகரில் புகை மண்டலம் ஏற்பட்டு வாகன ஓட்டிகளுக்கு சிரமங்கள் ஏற்பட்டு வந்துள்ளது.

இத்தகைய செயல்கள் பொது மக்களிடம் விழிப்புணர்வு இல்லாமையால் ஏற்பட்டு வந்தது. இதனை தவிர்க்க, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கடந்த 8 ஆண்டுகளாக போகிபண்டிகைக்கு முன் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், காவல்துறை, தீயணைப்பு துறை மற்றும் சென்னை மாநகராட்சியின் உதவியுடன் விழிப்புணர்வு பிரச்சாரத்தை நடத்தி வருகின்றது. இதன் காரணமாக கடந்த 4–5 வருடங்களாக பழைய ரப்பர் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் ரப்பர் டயர், டியூப் போன்றவை எரிப்பது பெரும்பாலும் குறைந்துள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் போகி பண்டிகைக்கு இரு தினங்களுக்கு முன் விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொண்டு சென்னை நகர மக்களிடையே பழைய பொருட்கள் எரிக்கப்படுவதால் ஏற்படும் தீமைகள், சுற்றுச்சூழல் பாதிப்புகள் போன்றவற்றை எடுத்து கூறிவருகின்றது. இத்தோடு போகி பண்டிகைக்கு முன் இரவு முழுவதும் பலகுழுக்களாக பிரிந்து வலம் வந்து பழைய பொருட்கள் எரிக்கப்படுவதை தடுத்து வந்துள்ளது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சென்னை மாநகராட்சி பகுதியில் சுமார் ஒன்பது இடங்களில் பேபகிப் பண்டிகையின் முதல் நாள் பகல் 2 மணி முதல் போகிப் பண்டிகை நாளன்று பகல் 2 மணி வரை 24 மணி நேர காற்று மாதிரிகளை ஆய்வு செய்கின்றது. இப்பணிகள் சுமார் 5 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. 2007 –

2008 ஆண்டு மற்றும் 2008 – 2009 ஆண்டுகளின் ஆய்வினை ஒப்பிடும்போது சென்ற ஆண்டின் காற்று தரமானது அதற்கு முந்தைய ஆண்டை விட காற்று மாசின் அளவு குறைந்திருந்தது கண்டறியப்பட்டது. மொத்த மிதக்கும் துகள்களின் அளவு 21 சதவிகிதமும், சுவாசிக்கும் மிதக்கும் துகள்களின் அளவு 40 சதவிகிதமும் நைட்ரஸ் ஆக்ஸைடின் அளவு 31 சதவிகிதமும் குறைந்திருந்தது கண்டறியப்பட்டது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் தமிழக அரசின் முயற்சியாலும், பொதுமக்களின் ஒத்துழைப்பாலும் காற்றின் தரம் மேம்பட்டுள்ளது.

இந்த வருடமும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் போகி விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொள்ள உள்ளது. அந்த பிரச்சாரத்தை துவக்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அதோடு பொதுமக்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோளையும் வைக்கின்றேன். வருகின்ற போகிப்பண்டிகையின்போது பழைய பொருட்களை எரிக்க வேண்டாம் எனவும் ரப்பர், பிளாஸ்டிக், பழைய டயர்கள், டியூப்கள் போன்றவைகளையும் எரிக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன். இந்த வருடம் மட்டும் அல்லாது வருகின்ற வருடங்களிலும் புகையில்லா போகிப்பண்டிகையினை கொண்டாடி சுற்றுச்சூழலை காக்க உதவிட வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொண்டு அனைவருக்கும் இனிய போகி மற்றும் பொங்கல் வாழ்த்தினையும், இனிய தமிழ் மற்றும் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்தினை தெரிவித்து அமைகின்றேன்.

*********

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9